# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**********

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

******

முறையீட்டு மனு எண்: 146/2018/பே–1
ஆணை நாள். **26–03–2019.**

திரு P. கலைச்செல்வன்,
த/பெ. திரு. பெரியண்ணன்,
No. 21, அம்பேத்கர் நகர் –1
எருமப்பட்டி அஞ்சல்,
சேந்தமங்கலம் வட்டம்,
நாமக்கல் மாவட்டம் – 637 103. -- முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
எருமப்பட்டி பேரூராட்சி,
நாமக்கல் மாவட்டம் – 637 103. -- எதிர் மனுதாரர்.

ஆணை.

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம், எண்.2/1 அம்பேத்கர் நகர்–1 பகுதியில் வசிக்கும் திரு.பி.கலைச்செல்வன், த/பெ திரு பெரியண்ணன், என்பவரது 24.06.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.06.2018ல் பெறப்பட்டு, முறையீட்டு மனு எண்.146/2018 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டி பேரூராட்சியில் 2009–10ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தில் பேரூராட்சியின் செயல் அலுவலர் திருமதி தமல்லிகைசுந்தரம் மற்றும் எருமப்பட்டி பேரூராட்சி முன்னாள் தலைவர் திரு.சிவராஜ் ஆகியோர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, எருமப்பட்டி பேரூராட்சியில் மேற்கண்ட திட்டத்தின் கீழ் சில பணிகளை மேற்கொண்டதாகவும், இதன் அடிப்படையில் அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.10.00 லட்சம் மதிப்பீட்டில் புதிய சந்தை வளாகப் பணியினைச் செய்ய குமார் கன்ஸ்ட்ரக்ஷன் என்பவருக்கு பணி ஆணை வழங்கப்பட்டதாகவும், அவர் மண் வேலையினை மட்டும் முடித்து, அதனைத் தொடர்ந்து கருங்கல் வேலையினை தொடங்கிப் பாதியிலேயே விட்டுச் சென்றதாகவும், இந்நிலையில் அந்த பணியினை முடிக்க எருமப்பட்டி பேரூராட்சி செயல்

அலுவலர், பேரூராட்சி தலைவர் மூலமாக தன்னை அணுகியதாகவும், தான் அதனை ஏற்றுக் கொண்டு உதவி நிர்வாகப் பொறியாளர் அவர்களின் அனுமதியுடனும், மேற்பார்வையுடனும் சந்தை வளாகப் பணியினை முடித்துக் கொடுத்ததாகவும், அந்த வேலையின் மதிப்பீடு ரூ.10.00 லட்சம் என்றாலும் மேற்கொண்டு ஆகும் செலவினத்தை பேரூராட்சி பொது நிதியில் வழங்க உதவிநிர்வாக பொறியாளர், பேரூராட்சி செயல் அலுவலரையும், தலைவரையும் கேட்டுக் கொண்டதாகவும், அவர்களும் அதனை ஏற்றுக் கொண்டு மன்ற அனுமதி வழங்கப்பட்டதாகவும், ஆனால் மதிப்பீட்டிற்கு மேல் தன்னால் செலவிடப்படப்பட்ட ரூ.5.00 லட்சத்தினை இதுவரை வழங்கவில்லை எனவும், இது குறித்து தான் பலமுறை மாவட்ட ஆட்சியர், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், உதவிப் பொறியாளர்கள் எனப் பலரையும் அணுகியதாகவும், தனக்கு இதுவரை தொகை கிடைக்கவில்லை எனவும் தெரிவித்து தன்னால் மதிப்பீட்டினை விடக் கூடுதலாக செலவிடப்பட்ட தொகை ரூ.5.00 லட்சத்தினை வட்டியுடன் பெற்றுத் தரக் கோரி தனது மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

29.06.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை மூலம் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து, முறையீட்டு மனு நகலுடன் நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் 27.08.2018 நாளிட்ட கடிதத்தில் 27.08.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையில் கோரிய அளவுப் புத்தகம் மற்றும் கோப்புகள் எடுக்கப்பட்டு அதில் தொடர்புள்ள அலுவலர்களுக்கு எழுத்து பூர்வமான விளக்கங்களை சமர்ப்பிக்கத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், சம்பந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து உரிய அறிக்கை பெறப்பட்டதும் விளக்க அறிக்கை சமர்ப்பிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

07.09.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையில் முறையீட்டு மனு தொடர்பாக தங்களது விளக்கங்களை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் 23.10.2018 அன்று ஆஜராகத் தெரிவித்து முறையீட்டு மனுதாரர், செயல் அலுவலர், எருமப்பட்டி பேரூராட்சி, தருமபுரி மாவட்ட பேரூராட்சிகளின் உதவி இயக்குநரக உதவி செயற்பொறியாளர் திரு.நடேசன், கோவை மாவட்ட பேரூராட்சிகளின் உதவி இயக்குநரக உதவிப் பொறியாளர் திருமதி.கோகுல லட்சுமி, சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் பேரூராட்சித் தொகுப்பு உதவிப் பொறியாளர் திரு.கணேசன், எருமப்பட்டி முன்னாள் பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி.மல்லிகைசுந்தரம், சேலம் மாவட்ட பேரூராட்சிகளின் உதவி இயக்குநரக பணி வரைவாளர் திரு.க.வீரமணி ஆகியோருக்கு அழைப்பாணையிடப்பட்டது.

07.09.2018 நாளிட்ட அழைப்பாணையின்படி இம்முறைமன்ற நடுவத்தில் 23.10.2018 அன்று ஆஜரான முறையீட்டு மனுதாரர் திரு.பி.கலைச்செல்வன் தனது வாக்குமூலத்தில் 24.06.2018 நாளிட்ட முறையீட்டு மனு தன்னால் அனுப்பப்பட்டதாகவும், நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டி பேரூராட்சியில் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் சந்தை மேம்பாட்டு பணியில் M/s. Kumar Constructions என்பவரால் தரைத் தளம் பணி மட்டும் செய்து விட்டு ரூ.3.00 லட்சம் ரூபாய் வாங்கி விட்டதாகவும், அதன் பின்னர் அப்போதைய மாவட்ட ஆட்சித் தலைவர், பேரூராட்சித் தலைவர் திரு.வி.சிவராஜ் மற்றும் அப்போதைய பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி.மல்லிகைசுந்தரம் ஆகியோர் எப்படியாவது பணியினை செய்து முடிக்கவேண்டும் என்று தன்னிடம் சொல்லியதாகவும், தான் மேற்கண்ட அலுவலர்கள் சொன்னதின்பேரில் எருமப்பட்டி பேரூராட்சி சந்தை மேம்பாட்டு பணியினை முடித்து விட்டதாகவும், இப்பணிக்காக இதுவரை ரூ.5.90 லட்சம் தனக்கு கொடுத்துள்ளதாகவும், மதிப்பீட்டினை விட கூடுதலாக ரூ.5.00 லட்சம் வேலை செய்துள்ளதாகவும், பணி நிறைவு செய்யப்பட்டு மீதி தொகை ரூ.5.00 லட்சம் பொது நிதியில் தருவதாக சொல்லி இதுவரை

எட்டு ஆண்டு காலமாக தனக்கு பணம் வரவில்லை எனவும் தெரிவித்துள்ளார். தான் பொது மயானத்தில் ரூ.5.00 லட்சத்தில் ஒரு எரியூட்டுக் கொட்டகையும், தாழ்த்தப்பட்டோர் மயானத்தில் ரூ.2.60 லட்சம் மதிப்பீட்டில் எரியூட்டுக் கொட்டகையும், அம்பேத்கர் தெருவில் ரூ.70,000/– மதிப்பீட்டில் ஒரு கழிவு நீர் வடிகால் பாலமும், சந்தைமேடு மைதானத்தில் ரூ.7.00 லட்சம் மதிப்பீட்டில் ஒரு சமுதாயக் கூடமும் கட்டியுள்ளதாகவும், இப்பணிகளுக்கெல்லாம் பணம் ஒருவரிடமிருந்து வட்டிக்கு கடன் வாங்கி செய்துள்ளதாகவும், இந்த விவரம் எருமப்பட்டி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலருக்கு தெரியும் எனவும், அவரின் அனுமதி பெற்றே மேற்படி பணிகளை செய்துள்ளதாகவும், இதுவரை தான் செய்த பணிக்கு ரூ.5.90 லட்சம் தொகை மட்டுமே கொடுத்துள்ளதாகவும், இன்னும் சந்தை மேம்பாட்டு பணிக்காக செலவிடப்பட்ட கூடுதல் தொகை ரூ.5.00 லட்சம் வரவேண்டியுள்ளதாகவும், தான் ஒரு ஒப்பந்தக்காரர் இல்லை எனவும், தனது பெயரில் எந்த வேலையும் செய்தது இல்லை எனவும், சமூக ஆர்வமும் அப்போதிருந்த அலுவலர்களின் வேண்டுகோளின் பேரிலும், வற்புறுத்தலின் பேரிலும் தான் பணிகளை செய்தததாகவும் தெரிவித்துள்ளார்.

மாவட்ட ஆட்சியர், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், அப்போதிருந்த செயல் அலுவலர்கள, உதவிப் பொறியாளர்கள், முன்னாள் தலைவர்கள் என பலரையும் பல முறை சந்தித்ததாகவும், நாட்கள்தான் ஓடியதே தவிர தன்னால் செலவிடப்பட்ட தொகை கிடைக்கப்பெறவில்லை எனவும், தனக்கு சேரவேண்டிய தொகையினைப் பெற்றுத் தர ஆவன செய்யுமாறும் கோரியுள்ளார். வேலை நிறைவு பெற்றதைத் தொடர்ந்து பணி ஆய்வாளர் அளவீடு செய்து, உதவி பொறியாளர் தேவையான அளவீட்டினை மட்டும் எடுத்துக் கொண்டு மீதித் தொகை வழங்கவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

23.10.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான தருமபுரி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரக முன்னாள் உதவி செயற்பொறியாளரும், முன்னாள் சேலம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரக உதவி செயற்பொறியாளருமான திரு.ஆர்.நடேசன் தனது வாக்குமூலத்தில் தான் 2011ம் ஆண்டு பிப்ரவரி வரை சேலம் மண்டலத்தில் பணியாற்றியதாகவும், நாமக்கல் மாவட்டத்தில் 19 பேரூராட்சிகளில் நடைபெறும் பணிகளுக்கான மதிப்பீடுகளுக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்குதல், தனக்கு கீழ் பணியாற்றும் உதவிப் பொறியாளர் மற்றும் பணி ஆய்வாளர் பணியினை அவ்வப்போது ஆய்வு செய்வது, உதவிப் பொறியாளரால் முடிக்கப்பட்ட பணிகளுக்கு மேல் அளவுகள் செய்வது பட்டியல் அங்கீகரிப்பது ஆகியவை தனது பணி எனவும், தான் பணியில் சேர்ந்ததும் பணி துவங்கப்பட்டு, தனக்கு முன் பணியில் இருந்த உதவி செயற்பொறியாளர் 11.03.2010ல் அளவுகள் செய்யப்பட்ட நிலையில்தான், தான் நாமக்கல் மாவட்டத்தில் எருமப்பட்டி பேரூராட்சியில் எடுக்கப்பட்ட அண்ணா மறுமலர்ச்சி திட்ட பணியான வாரச்சந்தை மேம்பாடுப் பணியினைத் தொடர்ந்து ஆய்வு செய்து வந்ததாகவும், மேற்படி பணி குமார் கன்ஸ்டரக்ஷன் என்ற நிறுவனத்திற்கே செயல் அலுவலரால் பணி உத்திரவு வழங்கப்பட்டிருந்ததாகவும், அசல் மதிப்பீடு மற்றும் வேலை மதிப்பீடு உதவிப் பொறியாளரால் தயாரிக்கப்பட்டு அதன்படி பணி முடிக்கப்பட்டு தொகை முழுமையாக செயல் அலுவலர் மூலம் ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டு விட்டது எனவும் தான் ஒப்பந்தக்காரைத் தவிர மற்ற யாரையும் கூடுதல் பணி செய்யக் கோரி நேரிலோ அல்லது எழுத்து மூலமாகவோ தெரிவிக்கவில்லை எனவும் தனது வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார்

23.10.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திருமதி த.மல்லிகை சுந்தரம் தனது வாக்குமூலத்தில் தான் நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டி பேரூராடசியில் 20.10.2008 முதல் 10.09.2011 வரை பணியாற்றியதாகவும், அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தில் புதிய வாரசந்தை வளாகப் பணிக்காக 06.07.2009ல் குமார் கன்ஸ்ட்ரக்ஷன் என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டதாகவும், அவர் கடகால் மட்டம் வரை வேலை செய்து தொகை

ரூ.2.00 லட்சம் 29.06.2010 முதல் தவணையாகப் பெற்றதாகவும், குமார் கன்ஸ்ட்ரக்ஷன் முறையீட்டு மனுதாரர் திரு.கலைச்செல்வன் என்பவரிடம் பேசி மற்ற வாரச் சந்தை பணிகள் அனைத்து வேலைகளும் செய்து பணியினை முடித்துக் கொடுத்தார் எனவும், வாரச் சந்தைப் பணிகளை உதவிப் பொறியாளரால் அளவீடு புத்தகத்தில் அளவு பதிந்தும் உதவி செயற்பொறியாளரால் மேலளவு செய்யப்பட்டு அளவுப் புத்தகத்தில் தெரிவிக்கப்பட்ட விவரப்படியான தொகை ரூ. 3,16,714/- மட்டும் 15.10.2010ல் இரண்டாம் தவணையாகவும், ரூ.4,83,219/- ஐ 28.01.2011ல் மூன்றாவது தவணையாகவும் மொத்தம் ரூ.9,99,933/- தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

23.10.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டி பேரூராட்சி முன்னாள் உதவிப் பொறியாளர் திருமதி. இ.கோகுல லட்சுமி தனது வாக்குமூலத்தில் தான் நாமக்கல் மாவட்டத்தில் நாமகிரிபேட்டை, சீராப்பள்ளி, பள்ளநல்லூர், சேந்தமங்கலம், மோகனூர், க.புதுப்பட்டி, பட்டணம் மற்றும் எருமப்பட்டி பேரூராட்சிகளின் தொகுப்பு உதவிப் பொறியாளராக 18.01.2010 முதல் 18.08.2011 வரை பணிபுரிந்ததாகவும், அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம், வாரச்சந்தை மேம்பாடு செய்தல் பணி (2009-10) செயல் அலுவலரால் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ந.க.எண். 69/2009 நாள் 06.07.2009ல் பணி ஆணை திரு.குமார் கன்ஸ்ட்ரக்ஷன் என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதாகவும், மேற்படி பணி முடிக்கத் தாமதமானதால், எருமப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரால் 19.02.2010, 22.03.2010 ஆகிய தேதிகளில் குறிப்பாணைகளும், 07.07.2010ல் சிக்கனத்தந்தி கடிதமும் திரு.குமார் கன்ஸ்ட்ரக்ஷன் என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதாகவும் பின்னர் வேலை துரிதப்படுத்தப்பட்டு அளவுகள் செய்யப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். அளவுகள் தன்னால் எடுக்கப்பட்டு, மேலளவுகள் உதவி செயற்பொறியாளரால் சரிபார்க்கப்பட்டதாகவும், ஏற்கனவே தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் RCC. Roof ற்கு பதில் G.I.Sheet roof போடக் கேட்டுக் கொண்டதால் பணி மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அதில் குறிப்பிடப்பட்ட வேலைகள் செய்யப்பட்டதாகவும் செய்த வேலைகளுக்கு அளவுகள், மேலளவுகள் எடுக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட பட்டியல் செயல் அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும், அசல் மதிப்பீடு மற்றும் பணி மதிப்பீடு பேரூராட்சி அலுவலகத்தில் கிடைக்கப்பெற்றவுடன் அதற்கான அறிக்கையினை சமர்ப்பிப்பதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

23.10.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான பெத்தநாயகன்பாளையம் பேரூராட்சி தொகுப்பு உதவிப் பொறியாளர் திரு.ஆர்.கணேசன் தனது வாக்குமூலத்தில் தான் நாமக்கல் மாவட்டம், நாமகிரிப்பேட்டை பேரூராட்சித் (தொகுப்பு) உதவிப் பொறியாளராக 06.07.2007 முதல் 31.12.2009 வரை பணிபுரிந்ததாகவும், மேற்படி பேரூராட்சித் தொகுப்பில் எருமப்பட்டி பேரூராட்சியும் உள்ளடக்கியது எனவும் தெரிவித்துள்ளார். அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2009-2010ம் ஆண்டிற்கு எருமப்பட்டி பேரூராட்சியில் பணிகள் எடுத்து செய்வதற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(பேரூ-2) துறை அரசாணை(நிலை) எண்-94, நாள் 06.07.2009ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதாகவும், வாரச்சந்தை மேம்பாடு பணிக்கு ரூ.10.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்தும் மற்றும் தொழில் நுட்ப அங்கீகாரம் பெறப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

23.10.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான மோகனூர், எருமப்பட்டி பேரூராட்சிகளின் முன்னாள் பணி ஆய்வளர் திரு.க.வீரமணி என்பவர் தனது வாக்குமூலத்தில் தான் 24.10.2008 முதல் 04.03.2016 வரை பணி ஆய்வாளராக பணிபுரிந்ததாகவும், எருமப்பட்டி பேரூராட்சியில் 2009-10 ஆம் ஆண்டு அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலரச்சி திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட எருமப்பட்டி பேரூராட்சி சந்தை மேம்பாட்டு பணிகளை பார்வையிட்டதாகவும், வாரச்சந்தை பணி குமார் கன்ஸ்ட்ரக்ஷன், அம்பாயிபாளையம் என்னும் நிறுவனம் ஒப்பந்தம்

எடுத்து செய்ததாகவும், இப்பணிக்கான மதிப்பீடு ரூ.10.00 லட்சத்தில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் RCC. Roof போடப்பட்டுள்ளதாகவும், ஆனால் வேலை செய்யும் போது G.I Sheet roof க்காக பணி மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணி மதிப்பீட்டின்படி வேலை செய்து முடிக்கப்பட்டதாகவும், மேலும் மேற்படி பணிக்காக 3 தவணைகளாக அளவுகள் செய்து பட்டியல் தயார் செய்து வழங்கப்பட்டதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

எருமப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் 17.10.2018 நாளிட்ட கடிதத்தில் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். மேற்படி அறிக்கையில் நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டி பேரூராட்சியில் 2009–10ம் ஆண்டு அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.10.00 லட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்ட வாரச் சந்தை மேம்பாட்டுப் பணிக்கு கூடுதலாக செலவு செய்த தொகை ரூ.5.00 லட்சத்தினை வட்டியுடன் வழங்கக் கோரி திரு.கலைச்செல்வன் என்பவரின் முறையீட்டு மனு தொடர்பாக அந்த சமயத்தில் எருமப்பட்டி பேரூராட்சியில் பணியாற்றிய அலுவலர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதாகவும் அவர்களிடமிருந்து பெறப்பட்ட விளக்க அறிக்கையினை இணைத்தும் தனது அறிக்கையுடன் சமர்ப்பித்துள்ளதுடன், 2009–10ம் ஆண்டில் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் ரூ.10.00 லட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்ட வாரச்சந்தைப் பணி குமார் கன்ஸ்ட்ரக்ஷன் என்ற நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டு இப்பணியினை மேற்படி நிறுவனம் மூலமே முடிக்கப்பட்டதாகவும், இதில் முறையீட்டு மனுதாரர் திரு.பி.கலைச்செல்வன் என்பவருக்கு எவ்விதமான சம்பந்தமும் இல்லை என அப்போதைய உதவி செயற்பொறியாளர் திரு.ர.நடேசன் என்பவரால் தெரிவிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் அப்போதைய எருமப்பட்டி பேரூராட்சி உதவிப் பொறியாளர் மற்றும் எருமப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களும் தங்களது கடிதங்களில் மேற்படி பணியினை குமார் கன்ஸ்ட்ரக்ஷன் என்ற நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டு அந்நிறுவனம் மூலமே பணி முடிக்கப்பட்டதாகவும், மதிப்பீட்டினை விடக் கூடுதலாகப் பணி மேற்கொள்ள ஆணை எதுவும் வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ள கடித நகல்களை இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

மேற்கண்ட கடிதங்களின் அடிப்படையிலும் எருமப்பட்டி பேரூராட்சி அலுவலகத்தில் கிடைக்கப்பெற்ற ஆவணங்களின் அடிப்படையிலும் வாரச்சந்தைப் பணிக்கான மதிப்பீடு ரூ.10.00லட்சத்தில் முடிக்கப்பட்ட பணிக்கு 29.06.2010 அன்று முதல் தவணையாக ரூ.2.00 லட்சம், 15.10.2010 அன்று இரண்டாம் தவணையாக ரூ.3,16,714/– மற்றும் மூன்றாம் தவணையாக 28.01.2011 ல் ரூ.4,83,219/–ம் வழங்கப்பட்டதாகவும் தனது அறிக்கையில் எருமப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

29.10.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையில் திரு.பி.கலைச்செல்வன் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு தொடர்பாக 23.10.2018 அன்று எருமப்பட்டி பேரூராட்சி முன்னாள் அலுவலர்கள் அளித்த வாக்குமூலங்களின் அடிப்படையில் வாரச்சந்தை மேம்பாடு பணிக்கான அசல் மதிப்பீடுகள் மற்றும் வாரச்சந்தை பணிக்கான கூடுதல் தொகையினை பொது நிதியில் இருந்து ஈடு செய்ய தீர்மானிக்கப்பட்ட பேரூராட்சி மன்றத் தீர்மானம் ஆகியவற்றினை அனுப்பத் தெரிவித்து எருமப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

20.11.2018 நாளிட்ட எருமப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் கடிதத்தில் நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டி பேரூராட்சியில் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2009–10 ஆண்டில் பணிகள் தேர்வு செய்ய கோரியதைத் தொடர்ந்து எருமப்பட்டி பேரூராட்சி மன்ற தீர்மான எண்.129(4) நாள் 24.02.2009ன்படி 7 பணிகள் தேர்வு செய்யப்பட்டு ரூ.56.15 லட்சத்திற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு மாவட்ட ஆட்சியரின் ந.க.எண்.1202/2009–2–எ/நாள்.10.06.2009ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டதாகவும், ரூ.50.00 லட்சம் ஒதுக்கீடு

செய்ததில் மீதமுள்ள ரூ.6.15லட்சம் பொது நிதியில் ஈடு செய்யும் பொருட்டு மன்றத் தீர்மானம் எண்.189(9) நாள்.31.08.2009ல் தீர்மானம் இயற்றப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தில் வாரச்சந்தை மேம்பாட்டு பணியில் 02.06.2009ல் RCC மேற்கூரை அமைத்து பணி மேற்கொள்ள மதிப்பீடு தயாரிக்கப்பட்டதாகவும், பேரூராட்சி மன்றத் தலைவர் மற்றும் பொதுமக்கள் கேட்டுக் கொண்டதின்படி 22.04.2010ல் உதவிப் பொறியாளர் குறிப்பில் RCC மேற்கூரைக்கு பதிலாக GI Sheet கூரை அமைத்து பணியினை மதிப்பீட்டுத் தொகைக்குள் மேற்கொள்ள பணி மதிப்பீடு தயாரிக்கப்பட்டதாகவும், ரூ.10.00 லட்சத்திற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு, மேற்படி பணிகள் குமார் கன்ஸ்ட்ரக்ஷன் என்ற நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்ட பின்னர் மேற்படி நிறுவனத்திற்கு மூன்று தவணைகளாக தொகை மொத்தம் ரூ.9,99,933/- வழங்கப்பட்டதாகவும், மேற்படித் தொகை அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் செலவினம் மேற்கொண்டதாகவும் தனது அறிக்கையில் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

14.12.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையில் எருமப்பட்டி பேரூராட்சி மன்ற தீர்மான எண்.189(9) நாள் 31.08.2009ல் தீர்மானிக்கப்பட்டவாறு எந்தெந்த பணிகளுக்கு பொது நிதி மூலம் கூடுதல் செலவினம் மேற்கொள்ளப்பட்டது என்ற விவரத்தினையும், வாரச்சந்தை பணிக்கான மதிப்பீடு மற்றும் அளவு புத்தக எடு பிரதியினையும் சமர்ப்பிக்கத் தெரிவித்து பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

மேற்படி விவரங்கள் கிடைக்கப்பெறாத நிலையில் 19.02.2019 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையில் மேற்படி விவரங்களுடன் 14.03.2019 நாளைய விசாரணைக்கு ஆஜராகுமாறு எருமப்பட்டி பேரூராட்சி உதவி பொறியாளருக்கு அழைப்பாணையிடப்பட்டதின் அடிப்படையில், 14.03.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான எருமப்பட்டி பேரூராட்சி உதவிப் பொறியாளர் தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள புகார்கள் குறித்தான காலத்தில் தான் மேற்படி பேரூராட்சியில் பணி புரியவில்லை என்றும், மனுவில் குறிப்பிட்டுள்ள அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டப் பணி குமார் கன்ஸ்ட்ரக்ஷன் என்ற ஒப்பந்தக்காரின் நிறுவனத்தால் செய்யப்பட்டுள்ளதாகவும், தான் இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு வரும் முன்னர் இது குறித்து விசாரணை மேற்கொண்டதில் முறையீட்டு மனுதாரர் திரு.கலைச்செல்வன் எந்த பணியினையும் செய்யவில்லை எனவும் ஒப்பந்தக்காரர் நிறுவனம் குமார் கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனம் மூலம் முறையீட்டு மனுதாரருக்கு பணிகள் ஒப்படைக்கப்பட்டதா என்ற விவரம் தெரியவில்லை எனவும், மேற்படி பணிக்கான அளவு புத்தக நகல் மட்டும் தன்னிடம் கொடுத்து அனுப்பியதாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். மேற்படி பணிக்கான முதல் அளவை திருமதி.கோகுல லட்சுமி, உதவிப் பொறியாளரால் 21.01.2010ல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இறுதி அளவை 23.12.2010ல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், சேலம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரக உதவி செயற்பொறியாளர் அவர்களால் 09.02.2010, 01.06.2010 மற்றும் 14.01.2011 ஆகிய தேதிகளில் மேலளவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், 28.01.2011ல் இறுதி தவணை பட்டியல் தொகை பட்டுவாடா செய்யப்பட்டுள்ளதாகவும், மொத்தம் மூன்று தவணைகளில் 29.06.2010ல் முதல் தவணையாக ரூ.2.00 லட்சம், 15.10.2010ல் இரண்டாம் தவணையாக ரூ.3,16,714/-ம் மற்றும் மூன்று மற்றும் இறுதி தவணையாக 28.01.2011ல் ரூ.4,83,219/-ம் குமார் கன்ஸ்ட்ரக்ஷன் என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டமைக்கான பதிவுகள் அளவு புத்தகத்தில் மேற்கொள்ளப்பட்டதை ஒளி நகல் எடுத்து எருமப்பட்டி பேரூராட்சி உதவி பொறியாளரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி உதவிப் பொறியாளர் எருமப்பட்டி பேரூராட்சியில் கடந்த மூன்று ஆண்டுகளாக பணிபுரிவதாகவும் இந்த மூன்று ஆண்டுகளில்

இது குறித்து எந்தவிதமான கோரிக்கையும் தன்னிடம் வைக்கவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டி பேரூராட்சியில் 2009–10ம் ஆண்டு அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் செயல்படுத்தியபோது இருந்த பணியாளர்களின் வாக்குமூலங்கள், எருமப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் உதவி பொறியாளரின் வாக்கு மூலம் மற்றும் அளவு புத்தக எடு பிரதிகள் ஆகியன பரிசீலிக்கப்பட்டன. அனைவரும் மேற்படி வார சந்தை பணிக்கு ரூ.10.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மேற்படி மதிப்பீட்டிற்குள் பணி வரும் வகையில் மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்துள்ளனர். இப்பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு குமார் கன்ஸ்ட்ரக்ஷன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டு 06.07.2009ல் பணி ஆணை வழங்கப்பட்டதாக அப்போதைய பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். மேலும் மேற்படி பணிக்கான அளவு புத்தக ஒளி நகல் பிரதிகளை ஆராய்ந்த போது இப்பணிக்கான முதல் அளவு 28.01.2010ல் எடுக்கப்பட்டு இறுதி அளவு 19.01.2011ல் முடிக்கப்பட்டு இப்பணிக்கான தொகை கீழ்க்கண்ட தேதிகளில் வழங்கப்பட்ட விவரம் அளவு புத்தக பிரதிகளின் மூலம் அறியப்பட்டது.

அதே அமஅ

| | |
|---|---|
| 29.06.2010 | ரூ. 2,00,000–00 (அளவு புத்தக பக்கம் .12) |
| 15.10.2010 | ரூ. 3,16,714–00 (அளவு புத்தக பக்கம். 20) |
| 28.01.2011 | ரூ. 4,83,219–00 (அளவு புத்தக பக்கம். 46) |
| மொத்தம். | ரூ. 9,99,933–00 |

மேற்கண்டவாறு வழங்கப்பட்ட தொகைகள் அனைத்தும் குமார் கன்ஸ்ட்ரக்ஷன் என்ற நிறுவனத்தின் பெயரிலேயே வழங்கப்பட்டதாக அளவு புத்தக எடு பிரதிகள் மூலம் அறியப்பட்டுள்ளது. மேலும், முறையீட்டு மனுதாரரும் தான் மேற்கண்ட பணிகளை செய்தமைக்கான எந்த விதமான ஆவணத்தினையும் இதுவரை இம்முறைமன்ற நடுவத்தில் ஒப்படைக்கவில்லை. அவ்வாறு தான் நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டி பேரூராட்சியில் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டப் பணிகளின் வாரச் சந்தை மேம்பாடு பணியினை செய்தமைக்கான பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் இதர அலுவலர்கள் மூலம் எந்தவிதமான எழுத்து பூர்வமான உத்திரவினை பெற்றதாக தனது மனுவிலோ தனது வாக்குமூலத்திலோ தெரிவிக்கவில்லை. மேலும் இப்பணி தொடர்பாக வாக்குமூலம் அளித்த தொழில் நுட்ப அலுவலர்கள் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர்கள் மேற்படி பணியினை குமார் கன்ஸ்ட்ரக்ஷன் என்ற நிறுவனம் மூலமே செய்யப்பட்டதாகவும், அந்நிறுவனத்திற்கே பணிக்கான தொகைகள் மூன்று தவணைகளாக வழங்கப்பட்டதாகவும் தங்களது வாக்குமூலங்களில் தெரிவித்துள்ளனர். முறையீட்டு மனுதாரர் தனது மனுவில் மேற்படி நிறுவனம் மண் வேலை மட்டும் செய்து ரூ.3.00 லட்சம் தொகை பெற்றுள்ளதாக தெரிவித்துள்ளார். ஆனால் அளவு புத்தக பிரதியில் முதல் தவணைத் தொகை ரூ.2.00 லட்சம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 லட்சத்திற்குள் பணி முடித்ததாக அளவு புத்தக பிரதிகளில் இருந்து அறியப்பட்டுள்ளது. மேலும் தனக்கு ரூ.5.90 லட்சம் தொகை வழங்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். ஆனால் இந்த தொகை யாரால் இவருக்கு எந்த அடிப்படையில் வழங்கப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் எதனையும் முறையீட்டு மனுதாரர் சமர்ப்பிக்கவில்லை. அளவுப் புத்தகப் பிரதிகளின்படி முறையீட்டு மனுதாரருக்கு எந்த ஒரு தொகையும் வழங்கியதற்கான பதிவுகள் ஏதும் இல்லை. மேலும் வாரச் சந்தை மேம்பாட்டுப் பணியில் கூடுதல் பணிகள் மேற்கொண்டமைக்கான தொகை தனக்கு வழங்கப்படவேண்டியுள்ளது என தெரிவித்துள்ள நிலையில், இப்பணிகளை மேற்கொள்ளத்

தனக்கு வழங்கப்பட்ட பணி உத்திரவு நகல் ஆதாரம் எதுவும் முறையீட்டு மனுதாரரால் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் வாரச்சந்தை மேம்பாட்டுப் பணியில் ரூ.10.00 லட்சத்திற்கான பணிகளுக்கான அளவுகள் மட்டுமே அளவு புத்தகத்தில் பதிந்தமைக்கான அளவு புத்தக ஒளி நகல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இதில் கூடுதல் பணிகள் மேற்கொண்டமைக்கான எந்த பதிவுகளும் அளவு புத்தகத்தில் பதியப்படவில்லை. மேலும், 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10(3) (c) ன்படி புகாருக்குட்பட்ட பணி ஐந்து ஆண்டுகளுக்கு முற்பட்டதென்பதால் முறையீட்டு மனுதாரரின் முறையீடு இம்முறைமன்ற நடுவத்தால் தொடர் விசாரணைக்கு ஏற்கத் தக்கதல்ல எனக் கருதி, அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர்.

பெறுநர்

1.திரு P. கலைச்செல்வன்,
த/பெ. திரு. பெரியண்ணன்,
No. 21, அம்பேத்கர் நகர் –1
எருமப்பட்டி அஞ்சல்,
சேந்தமங்கலம் வட்டம்,
நாமக்கல் மாவட்டம் – 637 103.

2.செயல் அலுவலர்,
எருமப்பட்டி பேரூராட்சி,
நாமக்கல் மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
சேலம் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சேலம்.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்
முறைமன்ற நடுவ செயலரின் தனி எழுத்தர்
உதவிப் பிரிவு அலுவலர் (ஊராட்சிகள்)